வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி 18.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, பிரேசில் நாட்டின் ரியோ-டி-ஜெனிரோ நகரில், ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றுகிறார்.
- ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா அட்டைத் திட்டத்தில், முதல் 3 வார காலத்திலேயே, 70 வயதிற்கு மேற்பட்ட 10 லட்சம் மூத்த குடிமக்கள் சேர்க்கப்பட்டு, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளது.
- மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்கண்ட்டில் வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது.
- புதுச்சேரியில், கடல்நீர், மழை நீர், மற்றும், ஆற்றுப் படுகை நீரை சுத்திகரித்து குடிநீராக வழங்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

-----------------------------

மோடி-பிரேசில் (16)

3 நாடுகளுக்கான பயணத்தின் 2ஆம் கட்டமாக பிரேசில் சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ரியோ-டி-ஜெனிரோ நகரில், ஜி-20 நாடுகளின் உச்சி மாநாட்டில் உரையாற்றுகிறார். மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, உலகத் தலைவர்கள் பலரையும், பிரதமர் சந்திப்பார் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றும், நாளையும் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டில், அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன், சீன அதிபர் திரு. ஜி ஜிங்பிங் உள்ளிட்டவர்களும் பங்கேற்க உள்ளனர். மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நைஜீரியாவில் இருந்து, இன்று காலை ரியோ-டி-

ஜெனீரோ சென்று சேர்ந்த பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, இந்தியக் கலாச்சார கொண்டாட்டத்துடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜி-20 கூட்டமைப்பின் நடப்பு தலைமை, முந்தைய தலைமை,மற்றும், அடுத்த தலைமையை உள்ளடக்கிய ட்ரோய்கா தொகுப்பின் ஒரு பகுதியாக, இந்தியா, ஜி-20 கூட்டமைப்பின் செயல்பாடுகளில் முக்கிய பங்களித்து வருவதும், கடந்த ஆண்டு ஜி-20 உச்சி மாநாட்டில், இந்தியா முன்வைத்த முன்னுரிமை அம்சங்கள், நடப்பு மாநாட்டில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------------

__*ஆயுஷ்மான் வ *__ *__வந்தனா__* __(15)__

ஆயுஷ்மான் பாரத் இயக்கத்தின் கீழ், கடந்த மாதம் 29ஆம் தேதி, பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடக்கி வைத்த, வய வந்தனா அட்டைத் திட்டத்தில், முதல் 3 வார காலத்திலேயே, 70 வயதிற்கு மேற்பட்ட 10 லட்சம் மூத்த குடிமக்கள் சேர்க்கப்பட்டு, புதிய மைல் கல் எட்டப் பட்டுள்ளது. ஆயுஷ்மான் பாரத்- பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இலவச மருத்துவ உதவிகளை, மூத்த குடிமக்கள் எளிதாக பெற, இந்த அட்டை வகை செய்கிறது. ஆயுஷ்மான் பாரத் வய வந்தனா அட்டை வழங்கப் பெற்ற மூத்த குடிமக்களில், 4 லட்சம் பேர் பெண்கள் என்றும், மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்திட்டம் தொடக்கப்பட்டது முதல், இதுவரை, சுமார் 9 கோடி ரூபாய் மதிப்பிலான மருத்துவ சிகிச்சைகளுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாகவும், 70 வயதிற்கு மேற்பட்ட சுமார் 4 ஆயிரத்து 800 மூத்த குடிமக்கள், இதனால் பயன் பெற்றுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது. இருதய ரத்தக் குழாய் அடைப்பு நீக்கம், இடுப்பு எலும்பு மாற்று அறுவை சிகிச்சை, கண்புரை அறுவை சிகிச்சை உள்ளிட்ட சிகிச்சைகள் இதில் அடங்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------------

தேர்தல் 1 (18)

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் ஒரே கட்டமாகவும், ஜார்கண்ட் மாநிலத்தில் 2ஆவது மற்றும் இறுதிக்கட்டமாகவும், வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் முடிவிற்கு வந்துள்ளது. இருமாநிலங்களிலும், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மற்றும் வேட்பாளர்கள், வாக்காளர்களை கவரும் வகையில், கடைசி நேர பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான, திரு. அமித் ஷா இன்று, நவி மும்பையில், பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கில், மஹாராஷ்ட்ர மாநிலம், 1 ட்ரில்லியன் அளவிற்கு பங்களிக்க முடியும் என்றும், மாநிலத்தில், மஹாயுதி அரசு மீண்டும் பதவிக்கு வந்தால்தான் இது சாத்தியமாகும் என்றும் அவர் கூறினார். மூத்த காங்கிரஸ்தலைவர் திரு. ராகுல்காந்தி, பந்த்ரா-கொர்லா பகுதியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசுகையில், மஹாராஷ்ட்ர அரசு, 7 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு திட்டங்களை, மற்ற மாநிலங்களிடம் இழந்து விட்டதாகவும், இத்திட்டங்களால், மஹாராஷ்ட்ர இளைஞர்களுக்கு, 5 லட்சம் வேலை வாய்ப்புகள் கிடைத்து இருக்கும் என்றும் கூறினார். தேசியவாத காங்கிரஸ்-எஸ்பி பிரிவுத் தலைவர் திரு.

தேர்தல் 2 (7)

சரத் பவார், இன்று புனே உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். ஜார்கண்டில்,மூத்த பிஜேபி தலைவரும், உத்தரபிரதேஷ் முதலமைச்சருமான யோகி ஆதித்யநாத், ராஜ்மகல் தொகுதியிலும், மூத்த ஜேஎம்எம் தலைவரும், முதலமைச்சருமான திரு. ஹேமந்த் சோரென், ஜாம்தாரா தொகுதியிலும், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர். காங்கிரஸ், ஆர்ஜேடி, மற்றும், இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும், பல்வேறு இடங்களில் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

-----------------------------

நிர்மலா 1 (17)

பாரத ஸ்டேட் வங்கியின் ஈடு இணையற்ற வளர்ச்சியை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் பாராட்டி உள்ளார். இன்று மும்பையில், பாரத ஸ்டேட் வங்கியின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், 3 மாகாண வங்கிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட இம்பீரியல் வங்கிதான், தற்போது பாரத ஸ்டேட் வங்கியாக செயல்பட்டு வருவதையும், 1920ஆம் ஆண்டுகளில், 250 கிளைகளை மட்டுமே கொண்டிருந்த பாரத ஸ்டேட் வங்கி தற்போது, 22 ஆயிரத்து 500 கிளைகள், 65 ஆயிரம் ஏடிஎம் மையங்கள், 85 ஆயிரம் வங்கி முகவர்கள், மற்றும், 50 கோடி வாடிக்கையாளர்களுடன் செயல்பட்டு வருவதையும் சுட்டிக் காட்டினார். உலக அளவிலான ஃபார்ச்சூன்-500 நிறுவனங்களின் பட்டியலில், இந்தியாவில் இருந்து இடம்பெற்றுள்ள ஒரே வங்கி, பாரத ஸ்டேட் வங்கிதான் என்றும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் டிஜிட்டல் வங்கி வசதிகளை பரவலாக்கியதில் பாரத ஸ்டேட் வங்கியின் பங்கு முக்கியமானது என்று, நிதியமைச்சர் கூறினார். தற்போது இந்த வங்கி, தினசரி 20 கோடி யுபிஐ பரிவர்த்தனைகளை கையாளும் திறனுடன் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். நாடு முழுவதும் 43 இடங்களில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் பாரம்பரியக்

நிர்மலா 2 (8)

கட்டிடங்களைப் பேணிக் காக்க, வங்கி நிர்வாகம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாரத ஸ்டேட் வங்கியின் நூற்றாண்டு விழா நினைவு நாணயத்தை, நிதியமைச்சர் இந்நிகழ்ச்சியின்போது வெளியிட்டார். பாரத ஸ்டேட் வங்கியின் பரிணாம வளர்ச்சி என்னும் நூலின் 5ஆம் பாகத்தையும், இதே நூலின் ஒலி வடிவ தொகுப்புகளையும் அவர் வெளியிட்டார்.

மத்திய நிதி சேவைகள் துறைச் செயலர் திரு. நாகராஜூ, பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் திரு. சி.எஸ். ஷெட்டி உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------------

*ரங்கசாமி-குடிநீர் 1 (17)*

புதுச்சேரியில், முதலியார் பேட்டை, சுதானா நகர், மற்றும், சுற்றுப்புற பகுதிகளின் குடிநீர் தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, அடுத்த 30 ஆண்டுகளுக்கான தொலைநோக்குப் பார்வையுடன் சுதானா நகரில், ஹட்கோ, மற்றும், அம்ருத் நிதியுதவியுடன் மொத்தம் 35.56 கோடி ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப் பட்டுள்ள,மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டி, மற்றும் குடிநீர் வினியோகக் கட்டமைப்பை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். புதுச்சேரியில், கடல்நீர், மழை நீர், மற்றும், ஆற்றுப் படுகை நீரை சுத்திகரித்து குடிநீராக வழங்கும் திட்டம், 500 கோடி ரூபாய் மதிப்பில், விரைவில் செயல்படுத்தப்படும் என, அவர் தெரிவித்தார். இதற்கு முன்னோட்டமாக, 6 கோடி ரூபாய் செலவில், ஆற்று நீரை சுத்திகரித்து வினியோகிக்கும் திட்டம் தொடக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். மக்கள் குறைகளை கேட்டு சரிப்படுத்த, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மொத்தம் 66 கோடி ரூபாய் நிதி வழங்கப் பட்டுள்ளதாக முதலமைச்சர் தெரிவித்தார். ரேஷன் கடைகள் மூலமாக, தொடர்ந்து இலவச அரிசி வழங்க டெண்டர் கோரப் பட்டுள்ளதாகவும், அடுத்த மாதம் முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

*ரங்கசாமி-குடிநீர்* 2 (11)

சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. சம்பத், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான்,

பொதுப் பணித் துறைச் செயலர் திரு. திரு. ஜெயந்த குமார் ரே உள்ளிட்ட அதிகாரிகளும், உள்ளூர் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

சுதானா நகர் குடிநீர் திட்டத்தினால், சுதானா நகர், திவான் கந்தப்ப முதலியார் நகர், திருமால் நகர், பாரதியார் நகர், முருங்கப்பாக்கம், நைனார் மண்டபம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள், சுமார் 36 ஆயிரத்து 200 பேர் பயன் பெறுவார்கள் என்று, பொதுப் பணித் துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

<u>வ.உ.சி (6)</u>

கப்பலோட்டி தமிழன் வ.உ சிதம்பரனார் நினைவு நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப் பட்டது. பாரதி பூங்காவில் உள்ள வ.உ.சி. சிலைக்கு, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள் திரு. லட்சுமி நாராயணன், திரு.ஜெயகுமார், திரு. திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

------------------------------

<u>ஜெ□குமார் (19)</u>

புதுச்சேரியில் நடப்பு சொர்ணவாரி பருவத்தில், உயர் விளைச்சல் நெல் ரகங்கள், மற்றும், பாரம்பரிய நெல் ரகங்களை பயிரிட்ட விவசாயிகளுக்கு, வேளாண் துறையின் பயிர் உற்பத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உற்பத்தி மானியத்தை, அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று தொடக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பயிரிட்ட 2 ஆயிரத்து 558 விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாயும், பாரம்பரிய நெல் ரகங்களை பயிரிட்ட 3 விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 8 ஆயிரம் ரூபாயும் மானியம் வழங்கப் படுகிறது. உயர் விளைச்சல் நெல்

ரகங்களை பயிரிட்ட, 205 அட்டவணைப் பிரிவு விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு 6 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப் படுகிறது. இதுஅல்லாது, ஒருங்கிணைந்த விதை உற்பத்தி சான்றளிப்புத் திட்டத்தின் கீழ், சம்பா பருவத்தில், சான்று விதை நெல், மற்றும், ஆதார விதை நெல் உற்பத்தி செய்த 16 விவசாயிகளுக்கும், மொத்தம் 3.74 லட்சம் ரூபாய் மானியத் தொகை அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப் பட்டுள்ளது. வேளாண் அமைச்சர் திரு. ஜெயகுமார், குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. திருமுருகன், அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, மற்றும், அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------------

<u>பிஆர்டிசி (8)</u>

புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகத்தில், கடந்த 14 ஆண்டுகளாக பணி புரியும் பெண் நடத்துனர்களையும், 10 ஆண்டுகளாக பணி புரியும் ஒப்பந்த ஓட்டுனர்கள், மற்றும், நடத்துனர்களையும், பணி நிரந்தரம் செய்யக் கோரி, தினக் கூலி, மற்றும், ஒப்பந்த ஊழியர்கள் இன்று, பிஆர்டிசி பணிமனை முன்பாக, காலவரையற்ற தொடர் உண்ணாவிரதப் போராட்டம் தொடக்கி உள்ளனர். 7ஆவது ஊதியக் குழு பரிந்துரைகளின் அமலாக்கம், எம்ஏசிபி பலன்களை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளையும் இவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

-----------------------------

ஏனாம் (7)

ஏனாமில், உலக மீன்வள தினப் போட்டிகள், ஜிஎம்சி பாலயோகி விளையாட்டு அரங்கில், இன்று நடைபெற்றன. பள்ளி-கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும், பள்ளி மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகளும் இதில் அடங்கும். இதுஅல்லாது, ஏனாமில் உள்ள ஒய்எஸ்ஆர் உள்விளையாட்டு அரங்கில், பெண்களுக்கான கோலப் போட்டியும் நடைபெற்றது. மீன்வளத் துறை உதவி இயக்குநர் திரு.கொண்டையா உள்ளிட்டோர் இப்போட்டிகளை நடத்தினர்.

-----------------------------

வானிலை (8)

இன்று, குமரிக்கடல், மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. தென்தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில், அதிகபட்சம் மணிக்கு 55 கிலோ மீட்டர் வேகத்தில், சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இன்று இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

-----------------------------

இளைஞோர் விழா (16)

அடுத்த ஆண்டிற்கான தேசிய இளையோர் விழா, முன்னேறிய இந்தியாவிற்கான இளம் தலைவர்களின் உரையாடல் நிகழ்வாக, ஜனவரி 11, 12 ஆகிய தேதிகளில் கொண்டாடப்படும் என, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். நாட்டின் இளைஞர்கள், வளர்ச்சிக்கான தங்களின் பார்வைகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி முன்னிலையில்

எடுத்துக் கூறுவதற்கான வாய்ப்பாக இவ்விழா அமையும் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். நாடு முழுவதிலும் இருந்து, திறமையான இளைஞர்களை இனம் கண்டு, அவர்களை பேணி வளர்ப்பதே, இந்த உரையாடல் நிகழ்ச்சியின் நோக்கம் என்று, அவர் தெரிவித்தார். தேசிய, மற்றும், உலக அளவிலான பிரபலங்கள், மற்றும், கொள்கை வகுப்பாளர்களுடன் இளைஞர்களுக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் மேடையாக, இந்நிகழ்ச்சி அமையும் என்றும் அவர் கூறினார். முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான உந்து சக்தியாக இளைஞர்களை மேம்படுத்துவதில், இந்நிகழ்ச்சி முக்கிய பங்களிக்கும் என்று, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.